**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண்.52/2015</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. G. செல்வி, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 12.09.2022**

**பெயர் - ரத்தினாபாய்**

**க/பெ - வெங்காரெட்டி**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 03:11 p.m.**

**<u>பிரதிவாதிகள் 1 மற்றும் 2, 7 முதல் 9 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>-**

1. நான் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலம் ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால் எனது தந்தை வாங்கி எனது அம்மா மீது எழுதி வைத்தது. எனது அப்பா மேற்படி சொத்தை வாங்கியது குறித்தும் எனது அப்பா எனது தாயார் பெயருக்கு மேற்படி சொத்தை எழுதிவைத்தது குறித்தும் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எனது தந்தையார் சொத்தை வாங்கியது குறித்தும் எனது தாயார் பெயருக்கு அதை எழுதிவைத்ததாக நான் கூறுவது குறித்தும் வழக்குறையிலோ எனது பிரமான வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். செஞ்சி நாராயண ரெட்டி யார் என்றால் எனக்கு தெரியாது. செஞ்சி ராகவ ரெட்டி தான் எனது தகப்பனார். எனது தந்தையாரின் தகப்பனார் தான் செஞ்சி நாராயண ரெட்டி என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தையுடன் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்கள் மற்றும் மூன்று சகோதரிகள் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனாரின் மூத்த சகோதரர் செஞ்சு கிருஷ்ணா ரெட்டி, மற்றொரு சகோதரர் பெயர் வெங்கட் ரெட்டி என்றால் சரிதான். எனது தந்தையாரின் தாயார் பெயர் வெங்கட ராவக அம்மாள் என்றால் சரிதான். மேற்படி வெங்கட் ரெட்டி திருமணம் ஆகுவதற்கு முன்பே வாரீசு இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது பெரியப்பா செஞ்சு

கிருஷ்ணா ரெட்டியார் இரண்டு மகள் தான் சங்கரம்மாள் மற்றும் மோச்சம்மாள் என்றால் சரிதான். மேற்படி மோச்சம்மாளின் பிள்ளைகள் தான் இந்த வழக்கின் முதல் இரண்டு பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தந்தையார் உடன் பிறந்த சகோதரிகள் செஞ்சம்மாள், சுப்புலட்சுமி அம்மாள், சுந்தரம்மாள் என்றால் சரிதான். இதில் செஞ்சம்மாள் மற்றும் சுந்தரம்மாள் வாரீசுகள் இல்லாமல் இறந்துவிட்டனர் என்றால் சரிதான். சுப்புலட்சுமியம்மாளுக்கு செங்கல்வராய ரெட்டி மற்றும் சீனிவாச ரெட்டி ஆகிய இரு மகன்கள் மற்றும் காந்தம்மாள் மற்றும் கமலம்மாள் ஆகிய இரு மகள்களும் பிறந்தனர் என்றால் சரிதான். இதில் கமலம்மாள் என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். எனது தாயார் அவரது தாய்மாமாவான எனது தந்தையாரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான்.

3. என் தாய்மாமாவான செங்கல்வராய ரெட்டி அவரது தாய்மாமன் செஞ்சு கிருஷ்ண ரெட்டியின் மகளான மோச்சம்மாளை திருமணம் செய்து கொண்டார் என்றால் ஆமாம். எனது தந்தையாரின் தகப்பனார் தான் முதலில் இறந்தார் அதன் பிறகு தான் எனது தந்தையாரின் தாய் இருந்தார் என்றால் சரிதான். எனது தந்தை வழி பாட்டனார் இறந்தபிறகு எனது தந்தை வழி பாட்டியான வெங்கட ராகவ அம்மாள் அவரது மூன்று குமாரர்கள் மற்றும் அவர்களுடைய சகோதரியான சுப்புலட்சுமியம்மாள் ஆகியோருக்கு தாவா சொத்து உட்பட மொத்த குடும்ப சொத்துக்களையும் கூட்டாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. என்படி என்னுடைய பாட்டி சுப்புலட்சுமியம்மாளை திருப்பதியில் திருமணம் செய்து கொடுத்தார்கள் அவரது கணவர் இறந்துவிடவே அவரது கணவர் சொத்தை விற்று வந்த பணத்தை அவரது சகோதரரான செஞ்சு ராவகரெட்டியிடம் கொடுத்து அவர் அந்த சொத்துக்களை வாங்கி எனது தாயார் பெயருக்கு எழுதி வைத்தார்.

4. என்படி செஞ்சு ராகவரெட்டிக்கு மற்றும் அவரது குடும்பத்திற்கு பூர்வீகமாக எந்த சொத்தும் இல்லையா என்றால் எனக்கு தெரியாது. சுப்புலட்சுமியம்மாள் பணம் கொடுத்து எனது தப்பனார் யாரிடம் எவ்வளவு நிலம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நான் கூறிய விவரங்கள் எனது தந்தையார் கூறி எனக்கு தெரியும். தாவா சொத்தை எனக்கு உரிமையானது என விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி தாவா சொத்தை எனது தாயார் வாங்கியதாக நான் கூறியுள்ளபோதும் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது பாட்டி

மற்றும் அவரது தாயார் மற்றும் அவரது சகோதரர்கள் சேர்ந்து தாவா சொத்து உட்பட மொத்த சொத்துக்களையும் 20.01.1930 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் மூலம் கட்டுப்பள்ளி கிராமத்தை சேர்ந்த நரசிங்க முதலியார் என்பவருக்கு அடமானம் வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. மேற்படி அடமானம் தெரியாத நிலையில் அதை மீட்ட விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அப்போது சின்ன குழந்தை. எனது தந்தையாருக்கு எனது தாயார் நான் மற்றும் எனது பிள்ளைகள் மட்டுமே வாரீசு என்றால் ஆமாம். எனக்கு திருமணம் ஆகும் போது 19 வயது இருக்கும். திருமணம் ஆன நாள் முதல் நான் மதுராந்தகம் தாலுக்காவில் சிதாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் ஆமாம். எனது தாய் வழி பாட்டி சுபலட்சுமி அம்மாள் என்றால் ஆமாம். என்படி சுப்புலட்சுமி அம்மாளின் சொத்துக்களில் எனது தாயார் கமலம்மாளுக்கு மட்டும் உரிமை உள்ளதா அல்லது அவரது சகோதரர்களுக்கும் உரிமை உள்ளதா என்றால் அனைவருக்கும் உரிமை உள்ளது ஆனால் அவர்களுக்கு சொத்துக்களை கொடுத்துவிட்டோம்.

6. பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோர் சுப்புலட்சுமி அம்மாளின் மகள் வழி பேத்திகள் என்றால் சரிதான். சொத்துக்களை அவர்களுக்கு கொடுத்துவிட்டோம் என்று கூறும் நிலையில் அவர்களுக்குள் பாகப்பிரிவினை நடந்ததா என்றால் ஆமாம் யார் யார் இடையே பாகப்பிரிவினை நடந்தது என்றால் சீனிவாச ரெட்டி மற்றும் செங்கல்வராய ரெட்டிக்கு இடையே நடைபெற்றது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் பதிவானதா என்றால் வாய்மொழியாக பிரிக்கப்பட்டது பதிவு செய்யப்படவில்லை. மேற்படி பாகப்பிரிவினையில் எனது தாயார் மற்றும் காந்தம்மாள் கலந்து கொள்ளவில்லையா என்றால் எனது தாயார் இறந்த பின்பே மேற்படி பாகப்பிரிவினை நடந்தது அதனால் எந்த பாகமும் எனது தாயாருக்கு கொடுக்கவில்லை. முதலில் செங்கல்வராய ரெட்டி இறந்தார் அதன் பிறகு சீனிவாச ரெட்டி இருந்தார். எனது தாயார் அதற்கு முன்பே இறந்துவிட்டார் இறந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தாய்மாமா இருவரும் எனது தாயார் இறந்த பிறகே இறந்தனர்.

7. மேற்படி பாகப்பிரிவினையில் எனது தாயார் கலந்துகொள்ளதாக நிலையில் மேற்படி சொத்தை எனது தாயாருக்கு யார் கொடுத்தது என்றால் எனது தந்தையார் கொடுத்தார். எனது தந்தையார் சொத்தை வாங்கி எனது தாயார் பெயருக்கு எழுதிவைத்ததாக நான் கூறும்

நிலையில் மேற்படி பத்திரத்தை பார்த்தால் தான் நான் கூறுவது உண்மை என தெரியவரும் என்றால் நான் கூறுவது உண்மை. நான் கூறும் அதே வாய்மொழி பாகப்பிரிவினையில் தாவா சொத்து செங்கல்வராய ரெட்டி பாகத்திற்கு சென்றது என்றால் சரியல்ல. அந்த சொத்து யார் பாகத்திற்கும் செல்லவில்லை அது தனிச்சொத்தாக இருந்தது.

8. எனக்கு சுமார் 25 வயதான போது எனது தாயார் இறந்தார். எனது தாயார் இறந்து 2 வருடங்களுக்கு நான் பயிர் செய்தேன் அதன் பிறகு அங்கு உப்பு தண்ணியாகியதால் அங்கு பயிர் செய்யவில்லை. தாவா சொத்திற்கு நானோ எனது தாயாரோ கிஸ்து செலுத்தினோமா என்றால் கட்டினோம். நான் மேற்படி என் கூற்றை நிரூபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்ட விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் உடனடியாக தெரியவந்தது.

9. மேற்படி மோச்சம்மாள் எனது தாய்மாமா மனைவி என்ற போதிலும் இதை குறித்து கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. நான் இந்த வழக்கை யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரகலட்சுமி, மகாராணி, மற்றும் சந்திரா ரெட்டி ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்குள் என்ன பிரச்சனை ஏற்பட்டது எதற்காக நீதிமன்றத்தை நாடினேன் என்றால் மேற்படி பிரதிவாதிகள் இருவரும் சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்டனர் மற்றும் விற்பனை செய்ய முயற்சித்ததால் நீதிமன்றம் வந்தேன். அச்சரப்பாக்கத்தில் நான் தற்போது வசிக்கிறேன். அங்கு எனது கணவரின் நிலங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது கணவர் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் எனது மகன் வழக்கறிஞராக உள்ளார்.

10. நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் விவசாய நிலங்களுக்கு அனுபவத்தில் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்த தேதியில் வழக்கு சொத்தின் பட்டா மோச்சம்மாள் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல எனது தாயார் பெயரில் தான் இருந்தது. இந்த வழக்கை மாவட்ட ஆட்சியர், கோட்டாச்சியர் மற்றும் வட்டாச்சியர் மீது தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் மீது ஏன் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் நிலஉடைமை திட்டத்தின் கீழ் எனக்கு தெரியாமல் பட்டா மாற்றப்பட்டதால் அவர்களையும் வழக்கில் தரப்பினராக சேர்த்தேன். பட்டா மாற்றம் குறித்து வருவாய் துறையில் ஏதேனும் மனு கொடுத்தேனா என்றால் மனு கொடுத்தேன்.

அந்த மனு என்னவானது என்றால் எனக்கு தெரியாது.  நான் பட்டாவை முன்னிருத்தி வழக்கு சொத்தில் உரிமை கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

11. எனது அப்பா, அம்மா, தாய்மாமா இறந்த பிறகு ஊரில் உள்ள சொத்துக்களை வாய்மொழியாக நானும் ஏமச்சந்திர ரெட்டி ஒரு தரப்பினராகவும் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் தாயார் மோச்சம்மாள் ஒரு தரப்பினராகவும், சீனிவாச ரெட்டி மனைவி நாகரத்தினம்மாள் மற்றொரு தரப்பினராகவும் குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துகொண்டு பிறகு அது குறித்து ஆவணம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் உள்ள பட்டா எண் 107 என்றால் சரிதான்.  பின்னர் யு.டி.ஆர் திட்டத்தின் கீழ் பட்டா எண் 400 என மாற்றப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.  பட்டா எண் 107 ஆக இருந்தபோதும் மோச்சம்மாள் தான் அங்கே பயிர் செய்துவந்தார் என்றும் பட்டா எண் 400 ஆக மாறிய பிறகும் மோச்சம்மாள் தான் அங்கே பயிர் செய்து வந்தார் என்றால் சரியல்ல.  அதன் பிறகு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் அங்கே பயிர் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல.  தாவா சொத்தின் கிஸ்து வரியும் மோச்சம்மாள் மற்றும் அவரது வாரீசுகள் தான் செலுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல.

12. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சொந்த தாய்மாமாவின் வாரீசுகள் என்பதை நான் இந்த வழக்கில் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.  நான் மேற்படி கூறிய 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மற்றும் சந்திரா ரெட்டி, மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் தவிர வேறு யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு யார் பெயரிலும் வழக்கு தாக்கல் செய்வில்லை.  சொத்து என்னுடையது என்று விளம்புகை கோரியும் வேறு யாரும் தொந்தரவு செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான் வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை.  நான் இந்த வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  வழக்கில் வேறு என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் வேறு என்ன பரிகாரமும் கோரவில்லை.  1 மற்றும் 2 ம் பிரதிவாதி தாவா சொத்தை யாருக்கு என்ன செய்தார்கள் என்றால் பட்டா மாற்றம் செய்தார்கள்.

13. எனது தாயார் 09.05.1958 இறந்துவிட்டார் என்றால் சரிதான்.  03.08.1989ல் தான் மேற்படி இறப்பை பதிவு செய்துள்ளோன் என்றால் அது பற்றி தெரியவில்லை.  செஞ்சு கிருஷ்ண ரெட்டி யார் என்றால் மோச்சம்மாளின் தந்தையாவார்.  எனது தாயாரின் வாரீசு சான்றிதழ் வாங்கியது குறித்து எனக்கு தெரியாது.  எனது தாயாருக்கு ஏமச்சந்திர ரெட்டி மற்றும்

நான் மட்டுமே வாரீசு என வாரீசு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதை யார் தாக்கல் செய்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏமசந்திர ரெட்டி எனது அண்ணன் ஆவார். மேற்படி ஏமசந்திர ரெட்டி மதுராந்தகம் தாலுக்கா சிதாபுரத்தில் இறந்துவிட்டார். அவர் திருணத்திற்கு முன்னரே இறந்துவிட்டார். அவர் என்னுடன் தான் வாழ்ந்துவந்தார். எனது திருமணத்திற்கு பின்னர் அவரை அழைத்து சென்றுவிட்டேன். எனது அண்ணன் ஏமசந்திர ரெட்டி 1995லேயே இறந்துவிட்டார். அவரது இறப்பினை 2011 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று பதிவு செய்தேன் என்றால் சரிதான். தாவா சொத்து எனது என்று விளம்புகை பரிகாரம் கோருவது தவறு என்றால் சரியல்ல. நான் கோரிய எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம்- 04:16 p.m.**